# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



உறுப்பினர் செயலர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: **திரு ஆ. முத்துக்கிருஷ்ணன், பி.இ.,**

ந.க.எண். : 1477/2019 ஈஉதிரு-2 நாள் : 02.06.2020

பொருள் : திட்ட அனுமதி - ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் - தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், ஈரோடு மாநகராட்சி, பெரியசேமூர் கிராமம், ரீ.ச.எண்: 234/4Pt மற்றும் ஈரோடு கிராமம் ரீ.ச.எண்:9/6-ல் - 0.73.40 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) மனைப்பரப்பில், தரை மற்றும் ஐந்து தளங்களில் பவானி சாலை பகுதி-I (நிலை-II) திட்டம் (Block A-ல் 186 குடியிருப்புகள் மற்றும் Block B-ல் 150 குடியிருப்புகள்) உத்தேச 336 EWS குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. ஈரோடு உள்ளூர் திட்டக் குழும கடிதம், இதே எண், நாள்: 28.11.2019 (நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது.)
2. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்கள் கடிதம் எண். 336/JA/Tpr/2019 நாள்: 21.05.2020 (பெறப்பட்ட நாள்: 22.05.2020)
3. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (MA-1) துறை நாள் : 04.02.2019
4. ஈரோடு உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண். 02/2019 நாள்:19.02.2019
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 4367/2019-நஊ2 நாள்: 31.10.2019
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்: 22908/2019சிபி, நாள்: 23.05.2020 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 29.05.2020.)
7. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 30.05.2020. (கட்டணங்கள் கோரப்பட்டது.)
8. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களால் கட்டணங்கள் செலுத்தி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் : 02.06.2020.

----------

உத்தரவு:

பார்வை (1)-ல் கண்டுள்ள கடிதம் மூலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புக்கான உத்தேசத்தினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் பலமாடி குடியிருப்பு கட்டுமான உத்தேசத்தினை Non high rise Building -ஆக மாற்றம் செய்து கொள்வதாக செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு உத்தேசம் திருப்பப்படுவதாகவும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் சுற்றறிக்கை எண்: 4367/2019/TCP2, நாள்: 06.11.2019-ன் படி உறுப்பினர் செயலர், ஈரோடு உள்ளூர் திட்ட குழுமம் அவர்களையே திட்ட அனுமதி வழங்குமாறும் பார்வை (6)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பார்வை (2)-ல் கண்டுள்ள செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட Non high rise Building குடியிருப்புக்கான உத்தேசம் பெறப்பட்டு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு, திட்ட அனுமதி கீழ்க்கண்டவாறு,

ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம் - தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், ஈரோடு மாநகராட்சி, பெரியசேமூர் கிராமம், ரீ.ச.எண்: 234/4Pt மற்றும் ஈரோடு கிராமம் ரீ.ச.எண்: 9/6-ல் 0.73.40 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) மனைப்பரப்பில், தரை மற்றும் ஐந்து தளங்களில் பவானி சாலை பகுதி-I (நிலை-II) திட்டம் (Block A-ல் 186 குடியிருப்புகள் மற்றும் Block B-ல் 150 குடியிருப்புகள்) உத்தேச 336 EWS குடியிருப்புகள் கட்டுமானம் அமையும் மனைக்கு "A to L" என எல்லையிட்டு "ம.வ/ஈஉதிரு **எண்: 13/2020"** என்ற எண்ணில் மனையிட ஒப்புதலும், அம்மனையில்

உத்தேச கட்டுமான விபரம்:

மனைப்பரப்பு - 0.73.40ஹெக்டேர் (1.81 ஏக்கர்)

AREA STATEMENT in Sq.mt. (Block A)

| Floor Details | F.S.I area sq.m. | No. of Dwelling | No. of Blocks | Total No. of Dwelling Units |
|---|---|---|---|---|
| Ground Floor | 1257.69 | 31 Dwelling | 1 | 31 |
| First Floor | 1240.83 | 31 Dwelling | 1 | 31 |
| Second Floor | 1240.83 | 31 Dwelling | 1 | 31 |
| Third Floor | 1240.83 | 31 Dwelling | 1 | 31 |
| Fourth Floor | 1240.83 | 31 Dwelling | 1 | 31 |
| Fifth Floor | 1240.83 | 31 Dwelling | 1 | 31 |
| Total | 7461.84 | -- | -- | 186 |

(Block B)

| Floor Details | F.S.I area sq.m. | No. of Dwelling | No. of Blocks | Total No. of Dwelling Units |
|---|---|---|---|---|
| Ground Floor | 1003.71 | 25 Dwelling | 1 | 25 |
| First Floor | 991.06 | 25 Dwelling | 1 | 25 |
| Second Floor | 991.06 | 25 Dwelling | 1 | 25 |
| Third Floor | 991.06 | 25 Dwelling | 1 | 25 |
| Fourth Floor | 991.06 | 25 Dwelling | 1 | 25 |
| Fifth Floor | 991.06 | 25 Dwelling | 1 | 25 |
| Total | 5959.01 | -- | -- | 150 |

கட்டுமான பரப்பு (A-Block) = 7461.84 sq.m.

கட்டுமான பரப்பு (B-Block) = 5959.01 sq.m.

மொத்த கட்டுமான பரப்பு (2 Block) = 13420.85 sq.m.

மேற்கண்ட உத்தேச 336 EWS குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் (ம) நிபந்தனைகளுடன் பார்வை (4)-ல் கண்டுள்ள உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் மற்றும் பார்வை (5)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வின் படியும் திட்ட அனுமதி எண். 11"அ, ஆ, இ"/2020 என்ற எண்ணில் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. திட்ட அனுமதிக்காலம் 02.06. 2020 முதல் ஐந்து ஆண்டுகளாகும்.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய பவானி சாலை-I சிறப்பு கட்டிடத்திற்கு இவ்வலுவலக கோப்பு எண் 1250/2019 ஈஉதிகு-2 மூலம் திட்ட அனுமதி எண் 01/2020 என்ற எண்ணில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள இட அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள OSR-1-ற்கான வரிசை எண் 1 முதல் 4 வரையிலான 834.12 ச.மீ பரப்பு, OSR-2-ற்கான வரிசை எண் 5 முதல் 10 வரையிலான 1271.49 ச.மீ பரப்பு மற்றும் OSR-3-ற்கான வரிசை எண் 11 முதல் 14 வரையிலான 239.39 ச.மீ பரப்பு ஆக மொத்தம் OSR-1, OSR-2 மற்றும் OSR-3-ற்கான 2345.00 ச.மீ பரப்பளவில் மேற்கண்ட பவானி சாலை-I (நிலை II) உத்தேசத்திற்கான திறந்த வெளி ஒதுக்கீடு (Open Space Reservation) பரப்பும் சேர்த்து ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இவ்வரைபடத்தில் திறந்த வெளி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீடு மற்றும் அதற்கான அணுகு வழி பாதையினை உள்ளாட்சியிடம் மனுதாரர் உரிய முறையில் மாற்றம் ஏதும் இல்லாமல் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

   வரைபடத்தில் OSR 1, 2, மற்றும் 3 என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எந்தவொரு கட்டுமானமும் கட்டப்படாமல் திறவிடமாகவே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

2. The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) 2016. The prombter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

3. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. மேற்படி சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

4. It is Responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

5. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the building rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects /Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

6. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின்ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்படவேண்டும்.

7. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக்கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

8. G.O.Ms.No.17, H&UD4(3), Dept, dt.05.02.2016 -ன்படி,
   (i) Minimum terrace area to be reserved for erecting solar photo voltaic panels shall be 1/3rd of total terrace area.
   (ii) The approximate space required for erecting solar photo voltaic panels is 10sq.m for generating 1KW of electricity.

9. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய உத்தேச மனையிடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை உரிய முறையில் விதிகளுக்குட்பட்டு அகற்றப்பட வேண்டும்.

10. திருத்திய உத்தேசம் அமையும் கட்டுமானத்திற்கு திருத்திய தீயணைப்பு துறையின் தடையின்மை சான்று உரிய முறையில் பெற்று உள்ளாட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

<u>**நிபந்தனைகள்**</u>

1. உத்தேச EWS கட்டுமானத்திற்கு Solar Water heating System வரைபடத்தில் குறிப்பிட்டவாறு அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

Scanned with CamScanner

45

மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படி நிலைநிறுத்தப்பட வேண்டும்.

3\. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில், நகர் ஊரமைப்பு சட்டம்-1971, பிரிவு-56 மற்றும் 57-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5\. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும்,அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6\. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

7\. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுதடுப்புசாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8\. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீதடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். தீயணைப்புத்துறை சான்றின்படி நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

9\. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) துறை-நாள். 3.11.2004 -ன்படி செப்டிக் டேங்க்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.

10\. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11\. பார்வை (2)-ல் கண்டுள்ள அரசாணை (நிலை) எண்.18, விதி 35, பிரிவு 22(b)-ன்படி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12\. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act) -ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

பார்வை (8)-இல் கண்டுள்ள செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்கள் கடிதம் மூலம் ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு உத்தேச கட்டுமானத்திற்குரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

திட்ட அனுமதி உத்தரவுக் கடிதம் மற்றும் முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்கள் மேற்கொண்டு உரிய அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவுக் கடிதம் மற்றும் முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை அனுப்பிவைக்குமாறு ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உறுப்பினர் செயலர்(பொ)
ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம்
ஈரோடு.

இணைப்பு : திட்ட அனுமதி உத்தரவுக் கடிதம் மற்றும்
முத்திரையிடப்பட்ட வரைபடங்களின் தொகுப்பு - 2

பெறுநர் : ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.

நகல் : செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம்,
188, சக்தி நகர், 3வது வீதி,
போயம்பாளையம் பிரிவு,
பெருமாநல்லூர் ரோடு,
திருப்பூர் - 641602

30/06/2020
EXECUTIVE ENGINEER
TNSCB, Tiruppur Division.

## ஈரோடு மாநகராட்சி
## கட்டிட அனுமதி உத்தரவு

47

க.வி எண் 056/CP/20-21/0011697

உ.ஆணை 056/BL/2020/00219

பி.ஏ எண் 056/BPA/2020/00507

நாள் :30/06/2020

பொருள்: கட்டிட அனுமதி ஈரோடு மாநகராட்சி, கிராமம் பெரியசேமூர், நகரளவு எண் 234/4PT, தொகுதி . பகுதி . கதவுமனை எண் 234/4PT கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்
பார்வை : செயற்பொறியாளர்,தமிழ்நாடு குடிசைமாற்றுவாரியம் என்பவரது 09-Jun-2020 ம் தேதிய விண்ணப்பம்.
மனையின் பரப்பளவு-78843.000 சதுர அடி

| S.No | Build Floor Name | UsageName | BuildingSqFt |
|---|---|---|---|
| 1 | Ground Floor | RESIDENTIAL | 24341.500 |
| 2 | First Floor | RESIDENTIAL | 24023.900 |
| 3 | Second Floor | RESIDENTIAL | 24023.900 |
| 4 | Third Floor | RESIDENTIAL | 24023.900 |
| 5 | Fourth Floor | RESIDENTIAL | 24023.900 |
| 6 | Fivth Floor | RESIDENTIAL | 24023.900 |
| | | Total Sqft | 144461.000 |

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| S.No | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி | 40.00 |
| 2 | தண்ணீர் தொட்டி | 85.00 |
| 3 | சுற்றுச்சுவர் கட்டணம் | 22380.00 |
| 4 | ஆழ்துளை கிணறு அமைக்க | 54820.00 |
| 5 | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 120000.00 |
| 6 | பாதாள சாக்கடை முன்வைப்புத் தொகை | 216000.00 |
| 7 | மனை அங்கீகரிக்க | 513800.00 |
| 8 | அபிவிருத்திக் கட்டணம் | 536840.00 |
| 9 | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 737760.00 |
| 10 | பழைய கட்டிடம் இடிப்புக் கட்டணம் | 1100800.00 |
| | Total Amount | 3302525.00 |

| Receipt No | Receipt Date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 056/103/2/20-21/0002126 | 30/Jun/2020 | 3302525.00 | DD |

| Fees Description | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| Centage Charges | 33 | 30/Jun/2020 | 500.00 |

**உத்தரவு :**

2008-ம் ஆண்டின் ஈரோடு மாநகராட்சி சட்டம் 275, 276-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம்:பெரியசேமூர்.கதவுமனை எண் 234/4PT, அன்னை சத்யா நகர், B P Agraharam, B P Agraharam , தொகுதி . பகுதி. நகரளவு எண் 234/4PT, உள்ள இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாறுதல் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/ புதுப்பித்து கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி/ திருத்தப்பட்டபடி கீழ்கண்ட கட்டுபாடுகளுக்கு 30/06/2020 தேதியில் இருந்து 29/06/2025 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

பெறுபவர்,

செயற்பொறியாளர்,தமிழ்நாடு
குடிசைமாற்றுவாரியம்
R S NO 234/4,அன்னை சத்யா நகர், B P Agraharam, B P Agraharam

உதவி ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி
மண்டலம் – I

நகல் : இளம் / உதவி பொறியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க
நகல் : வருவாய் உதவியாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க
நகல் : வருவாய் பிரிவு எழுத்தர்.

30/06/2020
**EXECUTIVE ENGINEER**
**TNSCB, Tiruppur Division.**

Scanned with CamScanner

## our services doesn't just end there



### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate